01557

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் The Open University of Srilanka
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம் Faculty of Humanities and Social Sciences

தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி - 2023/2024
Bachelor of Arts (Honors) in Tamil and Tamil Language Teaching - 2023/2024

இறுதிப்பரீட்சை (Final Exam) – 2023/2024
மட்டம் (Level) - 03 பருவம் (Semester) - 01

**LEU3301- தமிழ்மொழி ஓர் அறிமுகம் (Introduction to Tamil Language)**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்
Three (03) Hours

திகதி:- 29.09.2024 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30
Date :- 29.09.2024 Time : 09.30 a.m - 12.30 p.m

அறிவுறுத்தல்கள்/Instructions

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசியுங்கள்.
- உங்களுக்குரிய சுட்டெண்ணினைத் தெளிவாகக் குறிப்பிடுக.
- விடைக்குரிய சரியான வினா இலக்கங்களைக் குறிப்பிடுக.
- பகுதி – I இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.
- பகுதி -II இல் உள்ள எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
- தெளிவற்ற எழுத்துகள், எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும் என்பதனைக் கவனத்திற் கொள்க.

- **Read the given instruction carefully.**
- **Please write the correct index Number.**
- **Answer all the questions in Part 'I'**
- **Answer any three questions from Part 'II'**
- **Mark will be deducted for unclear writing, spelling and grammatical errors.**

முக்கிய குறிப்பு (Note) :
உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் முன்பக்கத்தின் முடிவுப்பகுதியில் உங்களுக்குரிய சரியான பதிவிலக்கத்தினையும் குறிப்பிடுக.
**At the bottom of the front page in your answer sheet, mention your correct Registration Number.**
பதிவிலக்கத்தினையோ, சுட்டெண்ணையோ பிழையாக எழுதினால் உங்களால் புள்ளிகளைப் பெற முடியாது என்பதைக் கவனத்திற் கொள்க.
**If you write your Registration Number and Index number incorrectly marks will be not obtained.**

## பகுதி - I

இப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளிக்கவும். வினாக்களை முழுமையாக வாசித்து, பூரணமாக விளங்கிக் கொண்டதன் பின்னர் விடைகளை எழுத ஆரம்பிக்கவும்.

1. அ) (i) திராவிட மொழிக் குடும்பத்தினுள் அடங்கும் மொழிகளில் நான்கினைப் (04) பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினுள் அடங்கும் மொழிகளில் நான்கினைப் (04) பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் யார்? (02 புள்ளிகள்)

ஆ) 'மொழிமாற்றத்தைக் கொண்டு சமுதாய மாற்றத்தையும் சமுதாய மாற்றத்தைக் கொண்டு மொழி மாற்றத்தையும் அறிந்து கொள்ள முடியும்'.

(i) மொழிமாற்றத்திற்கான காரணங்களுள் நான்கினைக் (04) குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) மொழிமாற்றத்தில் 'புறமாற்றம்' என்றால் என்ன என்பதனை உதாரணத்துடன் வரையறை செய்க.

(06 புள்ளிகள்)

இ) (i) இலக்கண உரைகாரர் சுட்டும் 'கொடுந்தமிழ்' என்பது எதைக் குறிக்கிறது? சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

(ii) 'குழூஉக்குறி' என்றால் என்ன என்பதை உதாரணத்துடன் வரையறை செய்க.

(06 புள்ளிகள்)

ஈ) (i) பேச்சின்றிய செய்திப்பரிமாற்ற முறைகள் **ஐந்தினைக் (05)** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) செய்திப் பரிமாற்றம் ஒன்று நடைபெறும் பொறிமுறையை வரைபடம் மூலம் தருக.

(05 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் = 40)

## பகுதி II

**இப்பகுதியில் உள்ள ஐந்து (05) வினாக்களில் எவையேனும் மூன்று (03) வினாக்களை மட்டும் தெரிவு செய்து விடையளிக்கவும்.**

2. ஒரு மொழிக் கூறுக்கும் அதை அடுத்துவரும் மொழிக்கூறுக்கும் இடையில் உள்ள உறவுநிலைப் பாகுபாட்டைக் குறிப்பிட்டு அவற்றை உதாரணத்துடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

3. 'திராவிட மொழிகளின் பொது இயல்புகள் பல தமிழிலே காணப்படுகின்றன'. இக்கூற்றை உதாரணங்களுடன் ஆராய்க.

(20 புள்ளிகள்)

4. ஐரோப்பியர் வருகையோடு தமிழ்மொழி அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை ஒலிநிலை, இலக்கணநிலை, சொற்களஞ்சிய நிலை என்பவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தி ஆராய்க.

(20 புள்ளிகள்)

5. கிளைமொழி என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு, அவற்றின் வகைகளைப் பாகுபடுத்தி உதாரணங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் **இரண்டு (02)** தலைப்புக்களைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

(அ) பேச்சு உறுப்புக்கள்

(ஆ) ஏனைய மொழிகளில் தமிழின் செல்வாக்கு

(இ) மனித மொழியின் சிறப்புக்கள்

(ஈ) திராவிட மொழிக் குடும்பத்தில் மலையாளம்

(20 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் = 60)

- முழுப்பதிப்புரிமையுடையது -